| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 04.06.2026 | |
| CC No.153/2026 | |
| சாட்சி :PW | |
| பெயர் : திரு. ரகுமான்கான் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. சதாம்உசேன் | தொழில் : காவல் உதவி ஆய்வாளர் |
| கிராமம் : தேவாரம் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 30/2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

------------------------------------------------------------

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1. நான் தற்போது துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.03.2026 அன்று இரவு 10.30 மணியளவில் நான் நிலைய அலுவலில் இருந்த போது பவித்ராதேவி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அந்த புகாரின் அடிப்படையில் துவரங்குறிச்சி காவல்நிலைய குற்ற எண்.82/2026 u/s.296(b),74, 118(1),75(2),75(1)(1), 79, 351(3) BNS r/w 4 of TNPHW Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். தொடர்ந்து இவ்வழக்கினை புலன் விசாரணக்கு எடுத்துக்கொண்ட நான் 13.03.2026 அன்று இரவு 11.15 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் பக்ருதீன், காசிம் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி சாட்சிகளிடம் பார்வை மகசரில் கையொப்பம் பெற்றேன். மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட ஒழுங்கற்ற கல்லை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். தொடர்ந்து இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையான சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்தது உண்மை என தெரியவந்ததால் அவரை இரவு 01.00 மணியளவில் அடையாளம் கண்டு துவரங்குறிச்சி பேருந்து நிலையம் அருகே வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். இவ்வழக்கில் காயமடைந்த

பவித்ராதேவி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மாரிஜியா என்பவரை விசாரித்து அவர் காயமடைந்தோருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என வழங்கிய விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்றிதழை பெற்றேன். அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பவித்ராதேவி அவர்களை மறுவிசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வாறாக புலன் விசாரணை முடித்து 18.03.2026 அன்று எதிரி நிஜாம்முதீன் எதிராக கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **முதல் தகவல் அறிக்கை, மாதிரி வரைபடம், பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர், விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்றிதழ், படிவம் 91 உள்ளிட்டவை முறையே அ.சா.ஆ. 4 முதல் 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ச.பொ.1 ஒழுங்கற்ற கல்லை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன்.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

( எதிரிகள் ஆஜர் இல்லை, வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய போதி வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.